**8.45 பணியமைப்பு – பேரூராட்சிகள் – டிராக்டர்கள் மற்றும் சிறிய லாரி ஓட்டுநர் பணியிடங்கள் தோற்றுவித்தல் மற்றும் அவற்றை நிரப்புதல் – அறிவுரைகள் – வழங்கப்படுகிறன்றன.**

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண்.23 நாள் : 3.3.1998

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண். 225 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை நாள். 12.9.97

2. பேரூராட்சிகளின் ஆணையரின் நேர்முகக் கடித எண். 17107/97/அ5 நாள். 14.8.97 மற்றும் 25.9.97

ஆணை :

அரசாணை (நிலை) எண். 225, நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, நாள். 12.9.97ல் சம்பந்தப்பட்ட பேரூராட்சி மன்றங்களிடமிருந்து செயற்குறிப்பினைப் பெற்று, கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு மோட்டார் வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் என்ற வீதத்தில் ரூ. 975–25–1150–30–1660 என்ற ஊதிய ஏற்ற முறையில் புதிய ஓட்டுநர் பணியிடங்களைத் தோற்றுவித்துக்கொள்ள பேரூராட்சிகள் இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1. புதிதாக ஏற்படுத்தப்படும் ஓட்டுநர் பணியிடங்களில் அந்தந்த பேரூராட்சிகளில் ஓட்டுநர் உரிமம்பெற்ற அலுவலக உதவியாளர்கள் (Regular employees and not NMR) இருந்தால் அவர்களை பதவி உயர்வளித்து ஓட்டுநர் பதவியில் அமர்த்திக் கொள்ளவேண்டும் மற்றும்

2. ஓட்டுநர் உரிமம் பெற்று தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில் மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று மேற்படி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

2. பேரூராட்சிகளில் ஒரு மோட்டார் வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் பணியிடம் என்ற வீதத்தில் ஓட்டுநர் பணியிடங்களைத் தோற்றுவிக்க பேரூராட்சிகள் இயக்குநர்களுக்கு அதிகாரம் வழங்கக் கோரி ஏற்கனவே செயற்குறிப் அனுப்பப்பட்டபோது கவனக் குறைவால் ஏற்கனவே பேரூராட்சிகளில் என்.எம்.ஆர். அடிப்படையில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருபவர்களின் பணியை வரன்முறைப்படுத்துவது குறித்து மேற்படி செயற்குறிப்பில் ஏதும் முன்மொழியவில்லை என்று பேரூராட்சிகள் இயக்குநர் தற்போது தெரிவித்துள்ளார். எனவே விதிகளின் படி அனைத்து தகுதிகளையும் பெற்று ஏற்கனவே பேரூராட்சிகளின் வாகன ஓட்டுநர்களாகப் பணி புரிந்து வருவோரின் பணியினை கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தலாம் என அவர் பார்வை 2ல் உள்ள தனது நேர்முகக் கடிதங்களில் தெரிவித்துள்ளார்.

அ) முறையான அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடம் இல்லாமல் வேலை வாய்ப்பகம் மூலம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் ஓட்டுநர்களை ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தினை கீழ் கொண்டு வரலாம்.

ஆ) வேலை வாய்ப்பகம் மூலம் தேர்வு செய்யப்படாமல் ஆனால் வேலை வாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ள தற்காலிக ஓட்டுநர்களையும் ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வரலாம்.

இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்யாமல் தற்காலிக ஓட்டுநர்களாகப் பணி புரிந்து வருபவர்களை முறையான ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் வேலை வாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தி அவர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்த நாள் முதல் அப்பதிவின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து அவர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரலாம்.

3. அரசு இதுபற்றி கவனமாக ஆய்வு செய்தது, நகராட்சிகளிலும் அரசு அலுவலகங்களிலும் புதிதாக ஓட்டுநர் பணியிடங்கள் ஏற்படுத்தும்போது அந்தந்த நகராட்சிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் ஓட்டுநர் உரிமம் பெற்று, ஓட்டுநர் பதவிக்குரிய தகுதிகளைப் பெற்றுள்ள அலுவலக உதவியாளர்கள், பதவி உயர்வு செய்யப்பட்டு ஓட்டுநர்களாக நியமிக்கப்படுகின்றனர். அதே நடைமுறையை பேரூராட்சிகளிலும் பின்பற்ற ஏற்கனவே பார்வை 1ல் கண்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. எனவே, பேரூராட்சிகளில் ஓட்டுநர் பதவிக்கு தகுதி வாய்ந்த அலுவலக

உதவியாளர்கள் இல்லாத நிலையில் ஏற்கனவே என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் தற்போது பணி புரிந்து வரும் டிராக்டர் மற்றும் சிறிய லாரி ஓட்டுநர்களைப் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் ஓட்டுநர் பணியிடங்களுக்கு மேலே பத்தி 2ல் பேரூராட்சிகள் ஆணையரால் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நியமனம் செய்யலாம் என கருதப்படுகிறது.

4. இந்நிலையில் பார்வை 1ல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள அரசு ஆணையை சிறிது மாற்றி, அந்தந்த பேரூராட்சி மன்றங்களிடமிருந்து செயற்குறிப்பினைப் பெற்று கீழ்க்காணும் நிபந்தனைக்குட்பட்டு ஓர் மோட்டர் வாகனத்திற்கு ஒரு ஓட்டுநர் என்ற வீதத்தில் ரூ. 975–25–1150–30–1660 என்ற ஊதிய ஏற்ற முறையில் புதிய ஓட்டுநர் பணியிடங்களைத் தோற்றவித்துக் கொள்ள பேரூராட்சிகள் ஆணையருக்கு அதிகாரம் வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

1) புதிதாக ஏற்படுத்தப்படும் ஓட்டுநர் பணியிடங்களில் அந்தந்த பேரூராட்சிகளில் ஓட்டுநர் உரிமம் பெற்ற அலுவலக உதவியாளர்கள், (Regular Office Assistant and not NMRs) இருந்தால் அவர்களைப் பதவி உயர்வளித்து ஓட்டுநர் பதவியில் அமர்த்திக் கொள்ளவேண்டும்.

2) பேரூராட்சிகளில் ஓட்டுநர் உரிமம் பெற்று தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் இல்லாத நிலையில் ஏற்கனவே பேரூராட்சிகளில் என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் பணி புரிந்து வரும் ஓட்டுநர்களை அப்பணியிடத்தில் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து அவர்களின் பணியினை கீழ்க்கண்டவாறு வரண்முறைப்படுத்தலாம்.

அ) முறையான அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் பணியிடம் இல்லாமல் வேலை வாய்ப்பகம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வரும் ஓட்டுநர்களை ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வரலாம்.

ஆ) வேலை வாய்ப்பகம் மூலம் தேர்வு செய்யப்படாமல், ஆனால் வேலை வாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ள தற்காலிக ஓட்டுநர்களையும் ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்படும் நாள் முதல் முறையான ஊதிய விகிதத்தின் கீழ் கொண்டு வரலாம்.

இ) வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்யாமல் தற்காலிக ஓட்டுநர்களாக பணி புரிந்து வருபவர்களை முறையான ஓட்டுநர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் வேலை வாய்ப்பகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு அறிவுறுத்தி அவர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்த நாள் முதல் அப்பதிவு அடிப்படையில் முன்னுரிமை அளித்து, அவர்களை முறையான ஊதிய விகிதத்தில் கொண்டு வரலாம்.

3) ஓட்டுநர் உரிமம் பெற்ற தகுதி வாய்ந்த அலுவலக உதவியாளர்கள் மற்றும் என்.எம்.ஆர்/தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் மாவட்ட வேலை வாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்று மேற்படி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

5. இவ்வாணை தொழிலாளர் (மற்றும்) வேலை வாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 4218/க்யூ2/98–1, நாள். 9.2.98ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர்